# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 24 August 2021

NSW GOVERNMENT

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 ஆகஸ்ட் 24-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 753 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வந்த உங்கள் அனைவருக்கும் நன்றி. நாங்கள் இப்போது, திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே 6 மில்லியன் தடுப்பூசிகளை எட்டியுள்ளோம். இது ஒரு மிகச்சிறப்பான மைல்கல் ஆகும். நீங்கள் இன்னும் உங்களுடைய தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளவில்லை என்றால், தயவுசெய்து nsw.gov.au-இல் அவசரமாகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.
- பரந்த மேற்கு சிட்னி (Greater Western Sydney) மற்றும் தென்மேற்கு சிட்னி (Southwest Sydney) ஆகிய பகுதிகள், இன்னும் அதிகூடிய நோய்த்தொற்றாளர்களைக் கொண்டுள்ளன. ஓபர்ன் (Auburn), மெரிலேண்ட்ஸ் (Merrylands), யகூனா (Yagoona), கில்ட்ஃபோர்ட் (Guildford), பாங்க்ஸ்டவுன் (Bankstown), பஞ்ச்பௌல் (Punchbowl), பிளாக்டவுன் (Blacktown) மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகள், மிகவும் கவலைக்கிடமான பகுதிகளாக உள்ளன. உங்கள் பகுதியில் உள்ள பொதுமுடக்க விதிமுறைகளை (lockdown rules) நீங்கள் அறிந்துவைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அத்துடன், உங்கள் வீட்டை விட்டு நீங்கள் வெளியே செல்லும் ஒவ்வொரு தடவையும், நீங்கள் நோய்த்தொற்றுக்கு முகம்கொடுக்கிறீர்கள் என்பதை கருத்தில்கொள்ளுங்கள்.
- நீங்கள் 16-39 வயதிற்குட்பட்டவராகவும், கவலைக்கிடமான புறநகர்ப்பகுதியில் வசிப்பவராகவும் இருந்தால், உங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முன்பதிவு செய்ய, தயவுசெய்து இங்கே செல்லவும்: Priority COVID-19 vaccination booking for 16 to 39 year-olds | NSW Government
- தடுப்பூசிகள் மிகவும் செயற்திறன் மிக்கவை. அஸ்ட்ராசெனீக்காவின் முதல் மருந்தளவை (டோஸை) நீங்கள் பெற்றிருந்தால், உங்களது இரண்டாவது மருந்தளவைப் பெறும் காலத்தை, முன்னோக்கிக் கொண்டு வருவது பற்றிக் கலந்துரையாடவும். உங்கள் அன்புக்குரிய வயதானவர் ஒருவர் உங்களோடு இருந்தால், தயவுசெய்து தடுப்பூசியைப் பெற அவருக்கு உதவுங்கள்.
- நேற்று 138,000-க்கும் மேலான பரிசோதனைகள் செய்யப்பட்டன. உங்களுக்கு இலேசான அறிகுறிகள் இருந்தாலோ, அல்லது நோய்த்தொற்றாளர் ஒருவருடன் நீங்கள் தொடர்புபட்டு இருந்திருந்தாலோ, தயவுசெய்து தொடர்ந்தும் பரிசோதனையைச் செய்துகொள்ள முன் வாருங்கள். நீங்கள் பரிசோதனைக்கு உட்பட்டதால் வேலை செய்ய முடியாவிட்டால், Test and Isolate Support Payment -க்கு நீங்கள் தகுதியுடையவராகலாம்.
- பொது முடக்கத்தால் அனைவரும் சோர்வடைந்துள்ளோம் என்பதை நாம் புரிந்துகொள்ளுகிறோம், ஆனால், நாம் தொடர்ந்தும் முன்னோக்கிப் போகவேண்டும். நாம் எல்லோரும் ஒன்றாக இதைக் கடந்து செல்வோம்.